




## பீடாதிபதியின் செய்தி

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் பீடாதிபதியாக கடமையேற்று சுமார் இரண்டு வருடங்கள் நிறைவை நோக்கி செல்கின்றது. இந்த இரண்டு வருடங்களில் ஏற்பட்ட மாற்றங்களை எண்ணிப் பார்க்கின்றேன். சுயநலம் கருதாது அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் கல்விசார், கல்வி சாராப் பணியாளர்கள், நல்ல விடயங்களை சாத்தியப்படுத்தும் மாணவ ஆசிரியர்கள், மாணவர் நலனில் அக்கறையுடன் செயற்படும் சேவையாளர்கள், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் புகழுக்கும் கீர்த்திக்கும் வலுச் சேர்க்க முயற்சிக்கும் பணியாளர்கள், பாடசாலை அதிபர்கள், நலன் விரும்பிகள், சமூக உறுப்பினர்கள், கல்வி அமைச்சின் அதிகாரிகள், பணியாளர்கள், ஏனைய கல்லூரிகளின் பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள் என சகலருமே தங்களின் பூரண ஒத்துழைப்பை வழங்கியிருந்தார்கள். அவர்களுக்கு இச் சந்தர்ப்பத்தில் வாழ்த்துக்களையும் நன்றிகளையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

கொவிட்-19 அலை ஒன்றில் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் நிகழ்நிலை செயற்பாடுகளில் நாம் மற்றைய கல்லூரிகளுக்கு வழிகாட்டியாக செயற்பட்டமை உண்மையில் ஆசிரிய கல்வியியலாளர்களின் அர்ப்பணிப்பு மிக்க சேவைக்கும், மாணவ ஆசிரியர்களின் பங்குபற்றலுக்கும் கிடைத்த அங்கீகாரம் என்றே எண்ணுகின்றேன்.

சுலபமாக இருக்கும் காரியங்களை மட்டுமே செய்தால் நாம் இலக்கினை அடைவதென்பது சிரமமான காரியம். எமது கடமைகளையும் பொறுப்புக்களையும் உணர்ந்து மன மகிழ்வுடன் செயலாற்றுவதன் மூலம் எதிர் காலத்திற்கு பயன் தரக் கூடிய சமூக எச்சங்களை உருவாக்கிக் கொள்ளலாம். இந்த வகையில் மிகவும் சவாலான கால கட்டத்திலும் எமது செயற்பாடுகள் மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக அமைந்தது. அந்த வகையில் கல்லூரியின் செயற்பாடுகளை ஆவணப்படுத்தி வெளியிடும் முயற்சியியல் திரு.மகாலிங்கம் நிரேஸ்குமார் உள்ளிட்ட குருதீபம் ஆசிரியர் குழுமம் தன் பங்களிப்பை சிறப்பாகச் செய்து வருகின்றது.

வாழ்க்கையின் “நிறையுணர்வு” என்பது பொருட்களை சேகரிப்பதில், பணத்தைச் சேமிப்பதில், வலிந்து புகழைச் சேமிப்பதில் உண்டாகாது. தன்னை உண்மையாக அறிதலின் அடிப்படையில் மற்றவர்களுக்காக சேவையாற்றுவதிலேயே தங்கியுள்ளது. சமய விழுமியங்கள் கூறிச் செல்லும் தத்துவங்களும் வாழ்வியல் சிந்தனைகளும் சந்தோசமான சேவை வாழ்க்கை முறைகளையே உணர்த்திச் செல்கின்றன. முயற்சி செய்வது என்பதைவிட சேவை செய்வதன் மூலம் வாழ்க்கைக்கு நிறைய அர்த்தம் சேர்க்க வேண்டும். ஒவ்வொருவரும் தன்னால் இயன்றவரை அர்ப்பணிப்புடன் பாடுபடுவதன் மூலம் நிறையுணர்வை தமதாக்கிக் கொள்ள வேண்டுமென எல்லாம் வல்ல வித்தக விநாயகர், முடி மன்னர் வைரவர் உள்ளிட்ட இஸ்ட தெய்வங்களை வேண்டி மிக விரைவில் கல்லூரி வளாகத்திற்குள் எமது செயற்பாடுகளை ஆரம்பிக்க இறைவனின் ஆசிகளை வேண்டி விடை பெறுகின்றேன்.

நன்றி…

**பீடாதிபதி**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி**
**கோப்பாய்.**

## கற்றல் முகாமைத்துவ முறைமையினூடான (LMS) மாணவ ஆசிரியர்களுக்கான கற்பித்தல் நடவடிக்கைகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன...

அனைத்து ஆசிரிய கல்வியியலாளர்கள் மற்றும் மாணவ ஆசிரியர்களை உள்ளடக்கித் தயாரிக்கப்பட்ட விசேட நேரசூசியின் அடிப்படையில் மாணவ ஆசிரியர்களுக்கான வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

அனைத்து மாணவ ஆசிரியர்களும் ஒரே நேரத்தில் நிகழ்நேர வகுப்புக்களில் இணையும்போது நிகழ் முறைமையில் ஏற்படுகின்ற நெருக்கடிகளைக் குறைப்பதற்காக மாணவர்கள் குழுக்களாக்கப்பட்டு வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன. கல்லூரியின் பீடாதிபதியின் வழிகாட்டலில் கல்விக்கும் தரமேம்பாட்டுக்கும் பொறுப்பான உப பீடாதிபதி செல்வி செல்வராசா செல்வமலர் அவர்களின் மேற்பார்வையில் இவ்வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

ஆசிரிய கல்வியியலாளர்கள் அனைவரும் மிகவும் அர்ப்பணிப்புடன் கால நேரம் பார்க்காது வகுப்புக்களை நடத்தி ஒத்துழைத்து வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

This monthly newsletter was published by Jaffna National College of Education, Kopay on 02.03.2021

***போசகர்:***

திரு.சுப்பிரமணியம் பரமானந்தம்
பீடாதிபதி

***ஆலோசகர்கள்:***

செல்வி செ.செல்வமலர்

திரு. தி.ஜெயகாண்டீபன்

திருமதி. செ.சிவபாதம்

உப பீடாதிபதிகள்

***ஆசிரியர் குழு:***

திரு.சி.முகுந்தன்

திரு.ம.நிரேஸ்குமார்

திருமதி.ஜெ.உதயகுமார்

திருமதி.ஞா.கணேசநாதன்

திருமதி.சு.விக்னமோகன்

திரு.ப.இராஜேஸ்வரன்

திரு.பொ.விஜயகுமாரன்

கலாநிதி.எஸ்.பத்மராசா

திரு.அ.லோகநாதன்

திரு.து.இளங்குமரன்

***வெளியீடு***

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,
கோப்பாய்.
021 223 0036
Jaffnancoe@hotmail.com
www.jaffnancoe.lk

**மூத்த விரிவுரையாளர் திரு. ஞானமணி இரத்தினசிங்கம் அவர்களின் மணிவிழா - 09.02.2021**





**2018 ம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் மாணவ ஆசிரியர்களை உள்வாங்குவதற்கான நேர்முகப் பரீட்சைகளுக்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள்...**









கொவிட் - 19 தொற்றிலிருந்து பாதுகாப்பதற்கான தொற்று நீக்கு நடவடிக்கைகள்...





நேர்முகப் பரீட்சை தொடர்பான தெளிவுபடுத்தல்கள் மற்றும் அறிவுறுத்தல் கூட்டம் கல்லூரியின் விளையாட்டு மைதான அலுவலகத்தில் நடைபெற்றது...





நேர்முகப் பரீட்சைக்கான ஆரம்பப் பணிகளில் அலுவலக உத்தியோகத்தர்கள்...





நேர்முகப் பரீட்சை தொடர்பான அறிவுறுத்தல்கள் மாணவர்களுக்கு வழங்கப்படும் தருணம்...





நேர்முகப் பரீட்சைக்கு வருகை தந்த மாணவர்களின் விபரங்கள் பதிவு செய்யப்பட்டபோது....




நேர்முகப் பரீட்சைக் குழுவினரில் ஒரு பகுதியினர்...



கொரோனா தாக்கத்திலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான பல்வேறு பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் நேர்முகப் பரீட்சைகள் நடைபெற்றன....





நேர்முகப் பரீட்சைக்கு வருகை தந்த மாணவர்கள் காத்திருப்பதற்கான தற்காலிகக் கொட்டகையொன்று கல்லூரியின் விரிவுரையாளர் திரு எடிசன் அவர்களினால் வழங்கப்பட்டது...



நேர்முகப் பரீட்சைக்கு வருகை தந்த மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கான சிற்றுண்டி வழங்கும் சேவை மற்றும் தற்காலிக கொட்டகை என்பன கல்லூரி வளாகத்தின் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர் திரு. பிரபாவினால் வழங்கப்பட்டன...



நேர்முகப் பரீட்சைக்கு தேவையான பல்வேறு தற்காலிக வசதிகளை அமைப்பதற்கான படங்குகள் பல்வேறு தன்னார்வலர்களினால் அன்பளிப்பாக வழங்கப்பட்டன...



This monthly newsletter was published by Jaffna National College of Education, Kopay on 02.03.2021